2023 மார்ச் 30]

தொகுதி அலுவலகங்களில் மிக மகிழ்ச்சியாகத்தான் இது நடைபெறுகிறது, எங்களுக்கு மிக வசதியாக இருக்கிறது என்ற ஒரு feedback*-ஐத்தான் தந்திருக்கிறார்கள். அதில் பிரச்சினைகள் வராது. நீங்கள் தயவுசெய்து அதை ஏற்றுக்கொண்டு மிக விரைவில் செயல்படுத்துமாறு அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

விழுப்புரம் வடக்குத் தெருவைச் சார்ந்த இப்ராஹிம் ராஜா உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம். ஏற்கெனவே மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் எழுப்புகின்ற பிரச்சினை எதுவாக இருந்தாலும் முக்கியமான பிரச்சினைதான். நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110. . . (குறுக்கீடு) நீங்கள் பேசுவது தொடர்பாக ஏற்கெனவே. . . (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள்.*

முற்பகல் 11–10

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விழுப்புரத்தில்* G.R.P. *தெருவைச் சேர்ந்த ராஜசேகர், வல்லரசு என்ற இளைஞர்கள் இருவரும் சகோதரர்கள். இவர்கள் இருவரும் கஞ்சா போதையில் நேரு வீதி, பாதுஷா தெரு, எம்.ஜி. ரோடு ஆகிய முக்கிய கடை வீதிகளில் ரகளையில் ஈடுபட்டுள்ளனர். இருவரும் போதையில், கடை வீதியிலுள்ள பல கடைகளை அடித்து நொறுக்கியதோடு, சாலையில் சென்றவர்களை கத்தியால் தாக்கியுள்ளனர். அப்போது, கஞ்சா போதையில் விழுப்புரம் மாவட்டம்,*

எம்.ஜி. சாலையிலுள்ள ஜோதி விருட்சம் கடைக்குச் சென்ற இருவரும் கத்தியைக் காட்டி கடையில் உள்ளவர்களை மிரட்டியுள்ளனர். அப்போது அருகிலிருந்த வடக்குத் தெருவைச் சார்ந்த முகம்மது ராஜா என்கிற முகம்மது இப்ராஹிம் ராஜா என்பவர், 'ஏன் இவ்வாறு தகராறு செய்கிறீர்கள்?' என்று கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த இவர்கள், கொடூரமான முறையில் இப்ராஹிம் ராஜா என்பவரை கத்தியால் குத்தியுள்ளனர். இக்கொடூர நிகழ்வு அனைத்து ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் வெளிவந்துள்ளது. இதில் படுகாயமடைந்த இப்ராஹிம் ராஜா என்பவரை, சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால், சிகிச்சை பலனின்றி இப்ராஹிம் ராஜா பரிதாபமாக உயிரிழந்துள்ளார். தமிழகத்தில் கஞ்சா பயன்பாடு அதிகரித்துள்ளதால், தினந்தோறும் இதுபோன்ற கொலை மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதைக் கண்டு மக்கள் அச்சத்தில் உள்ளனர். கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் தமிழகத்தில் தடையில்லாமல் புழக்கத்திலுள்ளது வேதனையை அளிக்கிறது. இச்சம்பவத்தைக் கண்டித்து, வியாபாரிகள், மேற்கு காவல் நிலையத்தை நேற்று இரவு முற்றுகையிட்டுள்ளனர். இந்தப் படுகொலையைக் கண்டித்து, விழுப்புரம் நகரத்தில், வியாபாரிகள் இன்று கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவம் இப்பகுதியில் மிகுந்த பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இப்ராஹிம் ராஜாவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு அரசு உரிய நிவாரண நிதியை வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். மேலும், இக்குற்றவாளிகள்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதே பொருள் குறித்து மயிலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்களும், விதி எண் 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். இதனை தகவல் கோரல் என்ற முறையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள், அரசின் தகவலுக்காக ஓரிரு வார்த்தைகளைச் சொல்லி அமரவும்.*

***திரு. ச. சிவகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம், வடக்குத் தெருவில் வசித்து வந்த இப்ராஹிம், எம்.ஜி. சாலையில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடியில்*

2023 மார்ச் 30] [*திரு. ச. சிவகுமார்*]

ஊழியராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில், நேற்று மாலை நோன்புக் கஞ்சி வாங்குவதற்காக ஒரு கடைக்குச் சென்றுள்ளார். அங்கு இரண்டு வாலிபர்கள் ஒரு பெண்ணிடம் தகராறு செய்து கொண்டிருந்தபோது, 'ஏன் நீங்கள் வீணாகத் தகராறு செய்கிறீர்கள்' என்று கேட்டதற்கு, அவர்கள் வைத்திருந்த கத்தியால், அவருடைய இடுப்பில் குத்தியதால் படுகாயமடைந்துள்ளார். பின்னர், அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்ற வழியிலே இறந்துவிட்டார். அந்தக் குடும்பம் ஏழ்மையான குடும்பம், கூலித் தொழில் செய்யும் குடும்பம் என்பதால், அவருடைய குடும்பத்திற்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற போதைப் பொருள்களை முற்றிலும் ஒழிக்க வேண்டும். அவருடைய குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் இஸ்லாமிய நபர் கத்தியால் தாக்கப்பட்டு உயிரிழந்தது பற்றிய அந்தச் செய்தியை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவகுமார் அவர்களும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் தங்கள் வாயிலாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் மேற்கு காவல் நிலைய சரகம், G.R.P. *தெருவைச் சேர்ந்தவரும், எம்.ஜி. ரோட்டில் பழக்கடை நடத்தி வருபவருமான திரு. ஞானசேகர் என்பவருக்கு சாந்தி என்ற மனைவியும், ராஜசேகர், வல்லரசு என்ற இரண்டு மகன்களும் உள்ளனர். இந்நிலையில், ஞானசேகருக்கு வேறொரு பெண்ணிடம் தொடர்பு இருப்பதாகவும், அதனால் பழக்கடையில் வரும் வருமானத்தை குடும்பத்திற்குத் தருவதில்லை என்றும், சாந்தி தனது மகன்களிடம் தெரிவித்துள்ளார்.*

இதனையடுத்து, 29–3–2023 அன்று மாலை, ராஜசேகர் மற்றும் வல்லரசு ஆகியோர் தனது தந்தையிடம் இதுகுறித்துக் கேட்க,

பழக்கடைக்குச் சென்றபோது, அங்கு அவர் இல்லாததால், அங்கிருந்தவர்களிடம் கேட்டு பிரச்சினை செய்திருக்கிறார்கள். அப்போது, அப்பிரச்சினையில் தலையிட்ட இப்ராஹிம் என்பவரை வல்லரசு மற்றும் ராஜசேகர் ஆகியோர் கத்தியால் குத்தி, காயம் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. இச்சம்பவத்தில் காயம்பட்ட இப்ராஹிம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய வழியில் உயிரிழந்திருக்கிறார். இச்சம்பவத்தில் ஈடுபட்ட வல்லரசு மற்றும் ராஜசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினர் மேல் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையின் காரணமாக ஏற்பட்ட தகராறின்போது, அங்கு தடுக்கவந்த நபர், துரதிருஷ்டவசமாக தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்திருக்கக்கூடிய சம்பவம் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110–ன்கீழ் அறிக்கை. பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு) நாளை உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வரலாற்றிலே ஒரு முக்கியமான நாள். 1924 ஆம் ஆண்டு, மார்ச் 30 அன்று, மாபெரும் சமூக சீர்திருத்தத்திற்கு அடையாளமாக விளங்கும் வைக்கம் போராட்டம் தொடங்கியதன் நூற்றாண்டு தொடக்க நாள் இன்று. (மேசையைத் தட்டும் ஒலி)*

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நாளில் வைக்கம் போராட்டம் வெற்றி பெற காரணமாக இருந்த பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், தந்தை பெரியாரைப் போற்றும்